

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண்.34

## அறிவிப்புகள் 2012–13

## 1. 2012–13 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள குடிநீர்த் திட்டங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 2011–2012ஆம் ஆண்டில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 8 குடிநீர்த் திட்டங்களின் ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்று கடலூார், விழுப்புரம், புதுக்கோட்டை, தேனி, சிவகங்கை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 63 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 8,134 குடியிருப்புகளிலுள்ள 44.36 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் 1,527.63 கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டங்கள், 2012–13ஆம் ஆண்டியல் உரிய நிதி ஆதாரத்துடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- தேனி–அல்லிநகரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்
- கடலூார் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த கடலூார், விருத்தாச்சலம், விழுப்புரம் மற்றும் திண்டிவனம் நகராட்சிகள், 13 பேரூராட்சிகள் மற்றும் 26 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 3,593 ஊரகக் குடியிருப்புகளுக்கான, கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம்.
- புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் 14 ஊராட்சி ஒன்றியங்ளைச் சார்ந்த 3,642 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த வல்லம் பேரூராட்சிகளுக்கான காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- கோயம்புத்தூர் மாவட்டம் ஜமீன் ஊத்துக்குளி பேரூராட்சி மற்றும் பொள்ளாச்சி வடக்கு, தெற்கு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 63 ஊரகக்

குடியிருப்புகளுக்கான ஆழியாறு ஆற்றினை நீரராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் மற்றும் உடுமலைப் பேட்டை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 158 ஊரகக் குடியிருப்புகளுக்கான திருமூர்த்தி அணையினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி (பகுதி), கீழப்பாவூர், ஆலங்குளம், மானுார், மேலநீலிதநல்லுார், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 147 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சி, பாப்பாக்குடி (பகுதி), கடையம் மற்றும் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 163 ஊரகக் குடியிருப்புகளுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- துாத்துக்குடி மாவட்டம் உடன்குடி பேரூராட்சி மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 368 ஊரகக் குடியிருப்புகளுக்கான, தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## <u>2. ஊரணிகளை குடிநீர் ஆதாரங்களாக மாற்றும் திட்டம்</u>

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் **230** ஊரணிகளை ரூபாய் **15.88** கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் (NRDWP) கீழ் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 3. 2012–13ஆம் ஆண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 2012–13ஆம் நிதியாண்டில் 6 கூட்டுக் குடிநீர் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர், பூலுவபட்டி, தென்கரை, வேடப்பட்டி, தாளியூர், ஆலாந்துறை, பேரூர் ஆகிய 7 பேரூராட்சிகள் மற்றும் தொண்டாமுத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 134 குடியிருப்புகள் பவானி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த வெள்ளக்கோயில், மூலனூர், தாராபுரம், குண்டடம் மற்றும் காங்கேயம் ஊராட்சி ஒன்றிங்கள் மற்றும் ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த சென்னிமலை ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் 1,262 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 2.84 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- சேலம் மாவட்டத்தைச் சார்ந்த எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 92,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேரூராட்சிகள் மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம் ஆகிய 9 ஊராட்சி

ஒன்றியங்களைச் சார்ந்த 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கு கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 7 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த அந்தநல்லூர், மணிகண்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 303 ஊரகக் குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 1.55 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஆத்தூர், நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சாணார்பட்டி, நத்தம், ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி, வடமதுரை, வேடசந்தூர், குஜிலியம்பாறை, திண்டுக்கல், ரெட்டியார்சத்திரம் மற்றும் பழனி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 1,062 குடியிருப்புகளுக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, சுமார் 5.18 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

## 4. மனிதவள மேம்பாடு

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 44.36 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 1,527.63 கோடி மதிப்பீட்டிலான 8 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை விரைந்து செயல்படுத்திடவும், 17.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை முடுக்கி விடவும் ஏதுவாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** 2012–13ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 69 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 73 இளநிலை வரைவு அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

## 5. புதிய சீருந்துகள் மற்றும் ஜீப்புகள் வழங்குதல்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடப்பு நிதியாண்டில் 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்கள், 8 மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 67 நகரக பாதாள சாக்கடைத் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை செயல்படுத்தவுள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் இத்திட்டங்களை சீரிய முறையில் கண்காணித்து விரைந்து முடிக்க ஏதுவாக, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் பணியாளர்களுக்கு 5 புதிய சீருந்துகள் மற்றும் 25 புதிய ஜீப்புகள் வழங்கப்படும்.

## 6. சென்னை நகருக்கு கூடுதல் நீர் ஆதாரம்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி,** புதியதாக அமைக்கப்படவுள்ள கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து, சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீரைக் கொண்டு வர, சுமார் ரூபாய் 165 கோடி திட்ட மதிப்பீட்டில், 40 கி.மீ. நீளத்திற்கு குழாய் பதிக்க சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 7. மாதவரம் பகுதிக்கு குடிநீர்த் திட்டம்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளள ஒரு பகுதியான மாதவரம் பகுதிக்கு முழுமையான குடிநீர்த் திட்டம், சுமார் ரூபாய் 55 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்.

## **8. சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டம்**

சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வசதியை மேம்படுத்த சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் முன்னுரிமை அடிப்படையில் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மணலி, சின்னசேக்காடு, புழல், நந்தம்பாக்கம், மீனம்பாக்கம், பள்ளிக்கரணை, பெருங்குடி, சோழிங்கநல்லூர், நொளம்பூர், ராமாபுரம், முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மடிப்பாக்கம், மாத்தூர், இடையஞ்சாவடி, சடையன்குப்பம், தீயம்பாக்கம், காரம்பாக்கம், வடபெரும்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், ஜல்லடன்பேட்டை, செம்மஞ்சேரி, உத்தண்டி, கடப்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய 32 பகுதிகளுக்கு குடிநீர் வசதிகளை மேம்படுத்த, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** முழுமையான குடிநீர்த் திட்டம் ரூபாய் 700 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 9. சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி

சென்னை மாநகருடன் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில்,** கழிவுநீர் அகற்றும் வசதி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது. சென்னை மாநகருடன் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள, கத்திவாக்கம், நந்தம்பாக்கம், மணப்பாக்கம், நொளம்பூர், நெற்குன்றம், ராமாபுரம், முகலிவாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், மடிப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, புழல், மீனம்பாக்கம், சோழிங்கநல்லூர், மாத்தூர், இடையஞ்சாவடி, சடையன்குப்பம், தீயம்பாக்கம், காரம்பாக்கம், வடபெரும்பாக்கம், சூரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், ஜல்லடன்பேட்டை, செம்மஞ்சேரி, உத்தண்டி, கடப்பாக்கம் ஆகிய 32 பகுதிகளுக்கு கழிவுநீர் அகற்றும் வசதி, ரூபாய் 1,300 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 10. சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு புதிய அலுவலகங்கள்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி,** சென்னை மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தரமான சேவைகள் அளிக்கும் பொருட்டு, இப்பகுதிகளில் 7 பகுதி அலுவலகங்களுக்கும், 93 பணிமனைகளுக்கும் மொத்தம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடங்கள் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கட்டப்படும்.

## 11. நீர் ஆதாரத்தை கண்காணிக்கும் அமைப்பை நிறுவுதல்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி,** பூண்டி, சோழவரம், செங்குன்றம், செம்பரம்பாக்கம் ஆகிய நீர் ஆதாரங்களிலிருந்து பெறப்படும் குடிநீர் மற்றும் தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் பெறப்படும் கிருஷ்ணா நீர், சென்னை மாநகரம் மற்றும் அருகாமையிலுள்ள பகுதிகளுக்கு பல்வேறு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலையங்களிலிருந்து வழங்கப்படும் நீரின் அளவு ஆகியவற்றை நேரடி தகவல் அறியும் மற்றும் மேட்ரிசஸ் காட்சி அமைப்பின் மூலம் கண்காணிக்கும் அமைப்பு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய அலுவலகத்தில், ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 12. கழிவு நீரேற்று நிலையங்களில் கைபேசி கண்காணிக்கும் அமைப்பு

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி,** 170 கழிவு நீரேற்று நிலையங்களில் அமைந்துள்ள கழிவுநீர் சேகரிக்கும் கிணற்றில் உள்ள கழிவுநீரின் அளவினை கண்காணிக்கவும், கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள ஒப்பந்த ஊழியர்களின் வருகையை கண்காணிப்பதற்கும், ரூபாய் 69.33 இலட்சம் மதிப்பீட்டில் கைபேசி கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் பயோமெட்ரிக் (biometric) உறுதிப்படுத்தும் முறை, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் செயல்படுத்தப்படும்.

## 13. ஒரே சீராக ஒளிரும் வழிகாட்டும் சாலைக் குறியீடுகள்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள□ ஆணையிட்டதற்கிணங்க,** ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி திட்டம் மற்றும் நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டங்களின் கீழ், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாலைப்பணிகளுக்காக கணிசமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, **9 மாநகராட்சிகள் மற்றும் 125 நகராட்சிகளில் பிரதான சாலைகளில் சீராக ஒளிரும் சாலைக்குறியீடுகள், சரியான முறையில் தெரியக்கூடியதாகவும், தெருக்களின் பெயர்கள் அதற்கான வழிக்குறியீடுகள், எச்சரிக்கை, கட்டாயக் குறியீடுகள், இடம் குறித்த குறியீடுகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிக் குறியீடுகள் ஆகியன அமைக்கப்படும் .**

## 14. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்

அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் சுற்றுச்சூழல் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுவதை தவிர்க்கும் பொருட்டு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** நடப்பாண்டில், போடிநாயக்கனூர், சிதம்பரம், ஓசூர், மேட்டூர், கொமாரபாளையம், இராசிபுரம், பெரியகுளம், காரைக்குடி, இராமேஸ்வரம், கொடைக்கானல், பழனி, சத்தியமங்கலம், பவானி, பொள்ளாச்சி, பெரம்பலூர், அரியலூர், சாத்தூர், நாகர்கோவில், திருப்பத்தூர், அரக்கோணம், ஜோலார்பேட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகள் ஆகிய **22 நகரங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் நிதியாதாரங்களைக் கொண்டும், சம்பந்தப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சியின் பங்களிப்புடனும், ரூபாய் 2,355 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

## 15. சேலம் மாநகரட்சியில் புதிய மீன் விற்பனை நிலையம் அமைத்தல்

தற்போது சேலம் மாநகராட்சியில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள மீன் விற்பனை நிலையத்தை அப்புறப்படுத்தி, ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மீன் விற்பனை நிலையம் கட்டப்படும்.

## 16. மாநகராட்சி / நகராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்

**மாண்மிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** போதிய இடவசதி மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வரும் சில மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு அலுவலகக் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டு, முதற்கட்டமாக **சேலம் மாநகராட்சி** மற்றும் ஒசூர், மறைமலைநகர், கொடைக்கானல், சங்கரன்கோவில், திருச்செங்கோடு, இராணிப்பேட்டை, தேனி–அல்லிநகரம், தர்மபுரி, துறையூர் மற்றும் பரமக்குடி ஆகிய **10 நகராட்சிகளில் ரூபாய் 37 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.**

## <u>17. ஒருங்கிணைந்த ஊரணி மேம்பாட்டுத் திட்டம்</u>

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 143 பேரூராட்சிகளில் 234 ஊரணிகள் ரூபாய் 54.32 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இப்பணி தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் மேற்கொள்ளப்படும். ஊரணிகளில் தூர்வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல், ஊரணிகளுக்குள் சிறு குட்டை அமைத்தல், நீர்வரத்து வாய்க்கால் மற்றும் உபரிநீர் வெளியேறும் வாய்க்கால் சீரமைத்தல், நடைபாதையமைத்தல், மின்விளக்கு வசதி ஏற்படுத்துதல் மற்றும் ஊரணிகளின் பாதுகாப்பிற்காக வேலியமைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும். இதன்மூலம், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதுடன் ஊரணிகள் அசுத்தமாவதிலிருந்தும், ஆக்கிரமிப்புகளிலிருந்தும் பாதுகாக்கப்படும்.

## <u>18. புவி தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதித்தல்</u>

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,** பேரூராட்சிகளிலுள்ள அனைத்து சொத்துக்களையும், உரிய மதிப்பீடு செய்து வரி நிர்ணயிப்பதற்கு ஏதுவாக, புவி தகவல் முறை அடிப்படையிலான சொத்து வரி விதிக்கும் முறை, சோதனை அடிப்படையில், ஒரு பேரூராட்சியில் ரூபாய் **36** இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

## <u>19. பேரூராட்சிகளில் பொறியியல் பிரிவை வலுப்படுத்துதல்</u>

தமிழ்நாட்டில் 529 பேரூராட்சிகள் உள்ளன 2011–12ஆம் ஆண்டு பேரூராட்சிகள் துறையில் ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம், ரூபாய் 665.64 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், பல்வேறு நிலைகளில் போதிய எண்ணிக்கையில் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. எனவே, பேரூராட்சிகள் துறையில், பொறியியல் பணியமைப்பினை சீரமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அதன்படி, பேரூராட்சிகள் துறையில் ஒரு கண்காணிப்புப் பொறியாளர், 10 செயற்பொறியாளர்கள், 21 உதவி செயற்பொறியாளர்கள், 116 உதவிப் பொறியாளர்கள், 10 வரைவாளர்கள் மற்றும் 279 மேற்பார்வையாளர்கள், ஆக மொத்தம் 437 பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

## 20. பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்துதல்

அனைத்து பேரூராட்சிகளிலும் படிப்படியாக பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அதன்படி 2012–13ஆம் ஆண்டு, மாமல்லபுரம் (விரிவாக்கப் பகுதி), திருப்போரூர், பொன்னேரி, ஆலங்காயம், செங்கம், பென்னாகரம், காவேரிப்பட்டினம், ஜலகண்டாபுரம், ஆலம்பாளையம், பெருந்துறை, குன்னத்தூர், பெரியநாயக்கன்பாளையம், பென்னாடம், உளுந்தூர்பேட்டை, வல்லம், வேளாங்கன்னி, நீடாமங்கலம், மண்ணச்சநல்லூர், குறும்பலூர், ஆயக்குடி, தமிழ்நாடு காகித ஆலை புகளூர், பரவை, பழனிசெட்டிப்பட்டி, முதுகுளத்தூர், கானாடுகாத்தான், சேத்தூர், சாம்பவார்வடகரை மற்றும் ஆழ்வார்திருநகரி ஆகிய பேரூராட்சிகளில், ரூபாய் 755.98 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## <u>21. அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்</u>

தமிழ்நாட்டிலுள்ள **529** பேரூராட்சிகளில், பெரும்பாலான பேரூராட்சிகள் மிகவும் பழமையான கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, பேரூராட்சிகளுக்கு படிப்படியாக புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தர **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அதன்படி **2012–2013**ஆம் ஆண்டில் பென்னாத்தூர், பனமரத்துப்பட்டி, அரகண்டநல்லூர், பண்ணைக்காடு, செட்டிப்பாளையம், பள்ளப்பாளையம், பெருந்துறை, வெங்கம்பூர், கமுதி, சாயல்குடி, களக்காடு, திருக்குறுங்குடி, பத்தமடை, திசையன்விளை மற்றும் ஆரல்வாய்மொழி ஆகிய **15** பேரூராட்சிகளில் ரூபாய் **6** கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டித்தரப்படும். அதேபோல், திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளில் உதவி இயக்குநர் அலுவலகம், ரூபாய் **1** கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

## 22. இருபத்திநான்கு மணி நேர அவசர பேறுகால கவனிப்பு மருத்துவமனைகளில் தீவிர சிசு கண்காணிப்பு பிரிவுகள் அமைத்தல்

சென்னை மாநகராட்சியின் 24 மணிநேர அவசர பேறுகால கவனிப்பு மருத்துவமனைகளில் ஆண்டு ஒன்றிற்கு 18,000 சிசுக்கள் பிறக்கின்றன. குறைந்த எடை, குறை மாதத்தில் பிறக்கும் சிசுக்கள் மற்றும் பிறப்பின் போது ஏற்படும் மூச்சுத் திணறல் போன்ற உடல் நலம் குன்றிய சிசுக்களின் உடனடி பராமரிப்புக்கு, உட்கட்டமைப்பு, நவீன உபகரணங்கள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய தீவிர சிசு கவனிப்பு பிரிவுகள் தொடங்குவது அவசியத் தேவையாகிறது.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** விரிவாக்கப்பட்ட சென்னை மாநகரில் பதிறாறு, 24 மணி நேர அவசர பேறுகால கவனிப்பு மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் ஒரு தீவிர சிசு கண்காப்பு பிரிவு, மொத்தம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன் மூலம், பச்சிளங்குழந்தை இறப்பு விகிதம் கணிசமாக குறையும்.

## 23. தெருவிளக்குகளின் எரிசக்தி திறன் சேமிப்பு நடவடிக்கைகள்

நகரங்களில் நிறுவப்பட்டுள்ள தெரு விளக்குகளை, குறைந்த மின் சக்தியில் ஒளிரும் விளக்குகளாக மாற்றுவது குறித்தும், தெரு விளக்குகளுக்கு மாற்று எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது குறித்தும் நடவடிக்கை எடுக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.** அதன்படி, சோதனை முறையில் 9 மாநகராட்சிகள், திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களிலுள்ள 35 நகராட்சிகள் மற்றும் 101 பேரூராட்சிகளில் தற்பொழுது பயன்பாட்டிலுள்ள குழல்விளக்குகளுக்குப் (FTL's) பதிலாக எல்.இ.டி (LED) போன்ற ஆற்றல் மிக்க மின்விளக்குகள் மற்றும் சூரியசக்தி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 24. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல்

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில், அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்படும் தொகை, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் மொத்த வருவாயில் 49 சதவீதத்திற்கு மிகக்கூடாது என்ற அரசு ஆணை நடைமுறையில் உள்ளது. இதனால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் அத்தியாவசியமான பணியிடங்களை நிரப்ப இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. புதிய வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் தொய்வு ஏற்படுகிறது. மேலும், திடக்கழிவு மேலாண்மை, பொது சுகாதாரம் போன்ற பணிகளும் பாதிக்கப்படுகின்றன. இதனை நிவர்த்திக்கும் பொருட்டு, மேற்படி ஆணையைத் தளர்த்தி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** அதன்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள 12,197 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 25. சிறந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான "மாண்புமிகு முதலமைச்சர் விருது"

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் வழங்கும் சேவைகளின் தரம் உயர, அவைகளுக்கிடையே ஆக்கப்பூர்வமான தூண்டுதலும், போட்டியும் இருப்பது அவசியம் என்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.** சிறந்த சேவைகள் வழங்கும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு "**மாண்புமிகு முதலமைச்சர் விருது**" வழங்கப்படும். அதன்படி, சிறந்த ஒரு மாநகராட்சிக்கு ரூபாய் 25 இலட்சம், முதல் மூன்று நகராட்சிகளுக்கு முறையே, ரூபாய் 15 இலட்சம், ரூபாய் 10 இலட்சம் மற்றும் ரூபாய் 5 இலட்சம் மற்றும் முதல் மூன்று பேரூராட்சிகளுக்கு முறையே, ரூபாய் 10 இலட்சம், ரூபாய் 5 இலட்சம் மற்றும் ரூபாய் 3 இலட்சம் ரொக்கப் பரிசும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

**கே.பி.முனுசாமி,**
நகராட்சி நிர்வாகம் மற்றும்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்